# காரைக்காலில் தீவிர போலியோ ஒழிப்பு முகாம் -2018

**PRESS NOTE :**

**தேதி** : 28.01.2018
**நேரம்** :காலை 8.30 மணி

கடந்த ஆண்டுகளைப்போல இவ்வாண்டும் வரும் **ஜனவரி 28** மற்றும் **மார்ச் 11** ஆகிய தேதிகளில் காரை மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு இளம்பிள்ளைவாத நோயை ஒழிக்க கூடுதல் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட உள்ளது .

காரை மாவட்டத்தில் **70** மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன .அவைகள் அரசு பொது மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையங்கள், தனியார் மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், அரசுபள்ளிகள், பஸ்நிலையங்கள் மற்றும் எல்லைப்பகுதிகளில் முகாம்கள் அமைக்கப்பட்டு **14,252** குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .

போலியோ சொட்டுமருந்து வழங்கும் பணியில் சுமார் **300** பயிற்சி பெற்ற நலவழித்துறை ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், தன்னார்வ தொண்டர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். **நகர்புறத்தில் 25 மையங்களிலும், கிராமபுறத்தில் 45 மையங்களிலும் காலை 7 மணி முதல் மாலை 3 மணி வரை** தொடர்ந்து போலியோ சொட்டு மருந்து கொடுக்கப்படும்.

வெளிமாநிலங்களிலிருந்து தொழில் முறையில் வசிப்பவர்களின் குழந்தைகளுக்கும், கோயில்களுக்கு வரும் பக்தர்களின் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டுமருந்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்களது 5 வயதிற்க்குட்பட்ட குழந்தைகளுக்கு இதற்கு முன்னர் எத்தனை முறை போலியோ சொட்டு மருந்து கொடுத்து இருந்தாலும் அவசியம் இம்முறையும் கொடுக்கப்பட வேண்டும். காய்ச்சல், சளி, வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் இருந்தாலும் கூட போலியோ சொட்டு மருந்து கொடுத்து போலியோ இல்லாத சமுதாயம் அமைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று [illegible] காரைக்கால் மாவட்ட ஆட்சியர் **திரு. R.கேசவன்,I.A.S.,** அவர்களும் தங்களது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இந்நிகழ்ச்சி அரசு பொது மருத்துவமனை உள் வளாகத்தில் நடைபெற்றது. **போலியோ இல்லாத உலகம் படைக்க அனைவரும் பாடுபடுவோம். நன்றி! வணக்கம்!**

இந்த போலியோ சொட்டு மருந்து வழங்கும் விழாவில் நலவழித்துறை துணை இயக்குநர் **டாக்டர். திரு. K.மோகன்ராஜ்,** பொதுமருத்துவமனை மருத்துவ கண்காணிப்பாளர் **டாக்டர். திருமதி. P.சித்ரா,** உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி **டாக்டர். திரு. P.உதயகுமார்** சுகாதாரத்துறை ஊழியர்கள், பொது மருத்துவமனை ஊழியர்கள், தாய்மார்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

DEPUTY DIRECTOR
UNIVERSAL IMMUNIZATION PROGRAMME